**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 388/2016**

நாள் 09.03.2026

PW2 – ராமசாமி

த/பெ – சென்னிமலை கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of March 2026)**

**குறுக்கு விசாரணை**

1. வாதி சின்னசாமியை எனக்கு சுமார் 10 வருடகாலமாக எனக்கு தெரியும். அந்த சின்னசாமியின் உடன்பிறந்தவர்கள் நான்கு பேர். வாதி சின்னசாமி 10 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துபோய்விட்டார். வாதி சின்னசாமிக்கு இரண்டு ஆண்மக்கள் , ஒரு பெண் வாரிசுகள் ஆகும். பிரதிவாதி ஆறுமுகத்தின் உடன்பிறந்தவர்கள் எனக்கு தெரியாது. அந்த ஆறுமுகத்தின் மனைவியின் அண்ணனான மாரப்பன் என்பவரை எனக்கு தெரியாது. திருப்பூர் வடக்கு வட்டத்தில் எஸ் .வி காலனி, காமராஜ்நகர் மற்றும் ஏவிபி லே–அவுட் ஆகிய இடங்கள் அருகருகே அமைந்துள்ளது என்றால் சரிதான். என்னிடம் 20 வருடங்களுக்கு முன்பாகவே அலைபேசி இருந்தது. என்னை பிரதிவாதி ஆறுமுகம்தான் சாட்சி கையொப்பம் போட அழைத்தார். 25.03.2005 ல் ஒரு எழுத்துபூர்வ கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள முடிவு செய்துள்ளதாகவும், இருவரும் சேர்ந்து என்னை காலை 10.00 மணிக்கு அவிநாசியில் உள்ள மேற்குரத வீதியில் ஆவண எழுத்தர் அலுவலகத்திற்கு வர சொன்னதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஏவிபி லே–அவுட்டை சேர்ந்த ஒருவரும் இருந்ததாக சொல்லப்பட்டுள்ள அந்த நபரின்

பெயர் எனக்கு தெரியாது. அந்த கிரைய ஒப்பந்தத்தில் கிரைய காலமாக மாதம் எதுவும் குறிப்பிடாமல் 25.03.2005 லிருந்து 29.12.2006 தேதி வரை என்று எதற்காக குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. மாரப்பனின் சகோதரி சாந்தாமணி மற்றும் வள்ளியம்மாள், சாந்தாமணியின் கணவர் ஆறுமுகம் ஆகியோர் மாரப்பன் மீது வழக்குகள் தாக்கல் செய்ததால் மாரப்பனின் தூண்டுதலின் பேரில் அவரது நண்பரான வாதி சின்னசாமியை வைத்து மோசடியாக கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால் 1ம் பிரதிவாதி ஆறுமுகம் அந்த கிரைய ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும், நாங்கள்தான் மோசடியாக கிரைய ஒப்பந்ததை தயார் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. என் முன்னிலையில் ஆறுமுகம் கையொப்பம் செய்ததாக சொல்வதும், நான் அவர் முன்னிலையில் சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. அதேபோல் எனது முன்னிலையில் ரூ.2,00,000/−ஐ ஆறுமுகத்திற்கு சின்னசாமி கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் வாதி சின்னசாமியின் மகன் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். அதனால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :−** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.10 17:41:01 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**